1981 ஏப்ரல் 7]

கின்றனவோ அவற்றை அரசாங்கமே நேரடியாக வாங்கி அந்த ஆலைகள் முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ. 4.20 என்பது இப்போதுள்ள நிதிநிலைமைக்கு ஏற்ப உயர்த்திக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருப்பது. அதை மேலும் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் பின்னால் வருமானால் அதை அரசு பரிசீலிக்கும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை மதுரைக்கு மாற்றுதல்.

*வினா எண். 676—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை 1–4–1981 முதல் மதுரைக்கு மாற்றுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாற்றுவதற்கான காரணம் என்ன ?

(இ) பலன் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையின் வேலைகள் பரவிக்கிடக்கும் முக்கிய மாவட்டங்களைக் கருத்திற்கொண்டு மதுரையை இத்துறையின் தலைமையிடமாக அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இதன் தலைமை அலுவலகத்தை அமைக்க தகுந்த கட்டிடம் மதுரையில் தற்போது கிடைக்க வில்லை என்ற காரணத்தாலும் தகுந்த கட்டிடம் கிடைத்து சில மாதங்களுக்குப் பின் மாற்றம் செய்தால், இம்மாற்றம் கல்வி ஆண்டின் இடைக்காலத்தில் ஏற்படுமாதலால் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும் என்ற காரணத்தாலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமையிடத்தைச் சென்னையிலிருந்து மதுரைக்கு மாற்றப்படுவதை இன்னும் ஓராண்டுக்குப் பின் ஆராயலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்துறையின் தலைமைப் பொறியாளர் குறைந்த கால அளவில், ஏனைய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்துறையின் வேலைகளை நேரில் சென்று கண்காணித்து, வேளாண்மைப் பொறியியல் சாதனங்களின் புதிய கண்டு பிடிப்புகளையும், மண் வளப் பாதுகாப்பு முறைகளையும் முனைந்து செயல்படுத்தி வேளாண்மை வளத்தை இன்னும் சிறந்த முறையில் பெருக்க இது வழி வகுக்கும்.

[1981 ஏப்ரல் 7

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஒரு வருடம் ஒத்திவைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக இந்த வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாக இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை, நெல்லை மாவட்டங்களில் இந்தப் பணிக்குரிய வேலைகள் பரவி இருக்கின்றன. சென்னையில் உள்ள தலைமை இடத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று வந்தபோது மதுரை சிறந்த இடமாக விளங்கியதால் அந்த மாறுதல் செய்யப்பட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : வேளாண்மைத் துறை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது உண்மை தானா? அதற்கான காரணங்கள் என்ன? அதன் அடிப்படையில் கிடைக்கக்கூடிய பலன் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது பற்றிய தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை மதுரைக்கு மாற்றியது ஒரு ஆண்டு நிறுத்தி வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே வேளாண்மைத் துறையின் மார்க்கட்டிங் பிரிவு திருச்சிக்கு மாற்றப்பெற்றது. சென்னையில் தலைமையகம் இயங்கும்போது மற்ற மாவட்டத் தலை நகரங்களுக்கு மாற்றுகிறபோது அங்குள்ள பெரிய அதிகாரிகள் அரசுத்துறை செயலாளரையும், அமைச்சர் அவர்களையும், சந்திப்பதற்காக அடிக்கடி சென்னைக்கு வருகிற நேரத்தில் அந்த அலுவலர்கள் தங்கள் வேலைகளை ரெயிலிலேயே பார்ப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட சிரமங்களைப் போக்குவதற்குத் தலைநகரிலேயே எல்லா தலைமை அலுவலகங்களும் இருக்கும்படி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேளாண்மைத் துறை நான்கைந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டபோது ஒவ்வொன்றின் தலைமையகமும் வெவ்வேறு மாவட்டத் தலைநகரில் இடம் பெற்றால்தான் இந்தப் பணி சிறப்புற மாநிலம் முழுவதும் நடக்க முடியும் என்ற வகையில் எடுக்கப்பட்ட கொள்கைப்படி, அந்த முடிவின்படிதான் இந்த மாறுதல் செய்யப்பட்டது.